# பெண்மையின் மேன்மையைப் பேசும் சிவ சைவம் - சிறப்புப் பார்வை

**பி.வி.தனலட்சுமி & முனைவர்.சிவ.முருகேசன்**

**உலகநாத நாராயணசாமி அரசுக் கல்லூரி (தன்னாட்சி), பொன்னேரி.**

**ஆய்வு சுருக்கம் :**

சைவத்தின் முழுமுதல் கடவுள் சிவபெருமான். பிறப்பும் இறப்பும் இல்லாதவர். பிரபஞ்சத்தில் சைவ மரபில் சிவம் சக்தி இரண்டும் ஒரு முழுமையின் இணைந்த இன்றியமையாத இரு அம்சங்கள் ஆகும்.

இறைவன் சிவபெருமான் மிகவும் அன்பானவர். பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்து சிறப்பித்துள்ளார். பிரபஞ்சத்தில் இருக்கின்ற ஒவ்வொரு பெண்ணும் அன்பு காட்டுவதில் ஆதிபராசக்தியாகவுமஇ தீமைகளைத் தகர்த்தெரிவதில் காளியாகவும் இருக்க வேண்டும் என்பதை இறைவன் சிவபெருமான் பல அற்புதங்களை நிகழ்த்தி எடுத்துரைத்திருக்கிறார். அவ்வாறு பல அற்புதங்களை நிகழ்த்திய சிறப்புமிக்க தலங்களில் சிலவற்றைக் குறிப்பிட்டிருக்கின்றன.

**ஆய்வு நோக்கம்**

பெண்ணுக்குத் துணையாக ஆண்களைப் படைந்திருந்தாலும், ஆணின் துணையில்லாமலும் இப்பிரபஞ்சத்தில் ஒரு பெண் தன் சுயமரியாதையுடனும் ஒழுக்க நிலை தவறாமலும் வாழ முடியும் என்பதை இறைவன் புராணக் கதைகள் மூலம் நிரூபித்திருக்கிறார். இல்லத்தில் அல்லது சமுதாயத்தில் இருக்கும் பெண்களுக்கு மரியாதை அளித்து வாழும் அனைவருக்கும் இறைவனின் ஆசியும் செழிப்பான வாழ்க்கையும் அளிக்கிறார் என்பதில் ஐயம் இல்லை.

**முன்னுரை:**

பெண்களின் பக்தியில் மகிழ்ந்து இவ்வையகத்தில் அவர்களும் ஆணுக்கு நிகரானவர்கள் என்றும் பெண்களுக்குள்ளும் ஆதிபராசக்தி இருக்கிறாள் என்பதை பல திருக்கோயில்களின் தல வரலாறு மற்றும் புராணக் கதைகள் மூலம் அறிந்துக் கொள்ள முடிகிறது.

**சதிதேவியின் அவமானத்தின் மூலம் பிரபஞ்சத்திற்கு கற்பித்தல்:-** தட்சனின் தவத்திற்காக, ஆதிசக்தி சதிதேவியாக தட்சனின் மகளாகப் பிறக்கிறாள். தட்சனின் விருப்பத்திற்கு மாறாக, சதிதேவி, இறைவன் சிவபெருமானை மனப்பூர்வமாக நேசித்து மணந்துக் கொள்கிறாள். சிவபெருமானை அழைக்காமல், இறைவனை அவமதிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தட்சன் யாகம் நடத்துகிறான். தட்சன் அழைக்கவில்லை என்றாலும் தன் தந்தை நடத்தும் யாகத்திற்கு சதிதேவி பிறந்த இடத்தையும் புகுந்த இடத்தையும் இணைப்பதற்காகச் செல்கிறாள். ஆனால் அவளுடைய விருப்பத்திற்கு மாறாக தன்னையும் தன் கணவனையும் தனது தந்தை தட்சன் அவமானப்படுத்தியதால் சதிதேவி வேள்வித்தீயில் வீழ்ந்து தன் தந்தை வளர்த்த உடலை வேள்வித் தீயினைக் கொண்டு மாய்த்துக் கொள்கிறாள். இதைக் கண்ட

சிவபெருமான் பெண்களை அவமானப் படுத்தின தட்சனை தன் திருமுடியிலிருந்து வீரபத்திரர் தோற்றிவித்து அழிக்கிறார். தன் சதியின் இறப்பைத் தாங்கிக் கொள்ள இயலாமல் இறைவன் சிவபெருமான் அவள் உடலைத் தூக்கிக்கொண்டு தன் நிலை மறந்து அலைகிறார். இறைவனின் இந்நிலையை மாற்றுவதற்காக திருமால் சுதர்சன சக்கரத்தின் மூலம் சதிதேவியின் உடலை 51 பாகங்களாக வீழ்த்துகிறார். அவை வீழ்ந்த இடங்களே 51 சக்தி பீடங்களாக உள்ளன. இப்புராணக் கதை மூலம் பெண்களை அவமானப்படுத்துகின்ற ஒவ்வொருவருக்கும் மரணம் மட்டுமே விலை என்பதை இறைவன் உணர்த்துகிறார்.

**பார்வதி வீரத்தின் மூலம் உணர்த்துவது:-** பர்வதராசன், மைனாவதியின் தவத்துக்காக ஆதிபராசக்தி பார்வதியாக அவதரிக்கிறாள. இறைவன் சிவபெருமானை அடைவதற்காகக் கடும் தவம் புரிகிறாள். பிரம்மனிடம சும்பன், நிசும்பன் என்ற இரு அசுரர்களும் தங்களுக்கு மரணம் பெண்களின் மூலம் மட்டுமே நடைப்பெற வேண்டும் என்ற வரம் வாங்கி இருந்தார்கள். மூவுலகையும் துன்பத்தில் ஆழ்த்துகிறார்கள். இவ்விரு அசுரர்களிடம் பணிபுரியும் சண்டன் முண்டன் என்ற இரு அசுர ஒற்றர்கள் பார்வதி தேவியின் அழகை வர்ணிக்கிறார்கள். இதை அறிந்துக்கொண்ட சும்பன் நிசும்பன் அவளை அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் சுக்ரீவன் என்ற அரசனை அனுப்பி வைத்தார்கள். அதுவரை பார்வதிதேவி குழந்தைத் தன்மையில் அரசனின் மகளாக இருந்தவள் மிகுந்த கோபத்துடன் தன் வீரத்தை பறைசாற்றி “பெண்ணின் அனுமதியின்றி அவளை ஆசைப்படுவது தர்மத்திற்கு ஒப்பானது அல்ல” என்று கூறி அவனுக்கு உயிர்பிச்சைக் கொடுத்து அனுப்பினாள். ஆனால் பார்வதிதேவியுடன், சண்டன் முண்டன் இருவரும் மீண்டும் போர்புரிய, அவர்கள் இருவரையும் வதம் செய்து சாமூண்டிசுவரி என்ற பெயர் பெற்றாள். சும்பன், நிசும்பன் இரு அசுரர்களும் தான் வாங்கிய வரத்தை மறந்த நிலையில் பார்வதி தேவியுடன் போர் புரிந்தனர். இவர்கள் இருவரையும் துர்க்கை வடிவத்தைக் கொண்டு வதம் செய்தாள் என்று புராணக்கதைகள் கூறுகின்றன.

பார்வதிதேவி ஒரு பெண்ணாக (மானுடராக) இருந்து பல வேதனைகளை அனுபவித்தாள். இறைவன் சிவபெருமான் அவளுக்கு மன தைரியத்தையும் வலிமையையும் அருளிச்செய்து மற்ற எவ்வித உதவியையும் “பதி”யாக நின்று செய்யாமல் பார்வதிதேவியிடம்; மறைந்திருக்கும் சக்தியை வெளிக் கொணர்ந்தார். இதன் வாயிலாக ஒரு பதியின் கடமை ஒரு பெண்ணுக்குப் பாதுகாப்பு கொடுப்பது மட்டுமில்லை, அவளிடம் மறைந்திருக்கும் திறமையைக் வெளிக்கொணர்ந்து இந்த பிரபஞ்சத்திற்கு தெரியப்படுத்தி பெருமை சேர்க்க வேண்டும் என்று எடுத்துரைத்துருக்கிறார். ஒரு ஆணின் துணை பெண்களுக்கு இல்லை என்றால் அவள் அபலை அல்ல, ஒழுக்க நெறி மாறாமல் தர்ம வழியில் சிந்திக்கும் எல்லா பெண்களிடமும் சிவபெருமானின் பரிபூரண ஆசியும், பெண்களுக்குரிய மன தைரியம், மற்றும ஆணின் வலிமை இருக்கிறது என்பதை இப்புராணக்கதை மூலம் உணர்த்தியிருக்கிறார் இறைவன் சிவபெருமான்.

ஒவ்வொரு பெண்ணும் சக்தியின் வடிவமாகும். கூட்டுப்புழு, வண்ணத்துப் பூச்சியாக மாற பல விதமான இன்னல்களை எதிர்கொள்கின்றது. அதுபோலவே பெண்ணினமும் பலவிதமான வலிகளைக் கடந்து இப்பிரபஞ்சத்திற்கு ஒர் உயிரைக் கொடுக்கின்றனர். இத்தகைய வலிமையைப் பெண் இனத்திற்குக் மட்டுமே கொடுத்து பெருமைச் சேர்த்தவர் சிவபெருமான்.

**அர்த்தநாரீஸ்வரர் (உமைபங்கன் வடிவத்தின) மூலம் உணர்த்துவது :-** இறைவனின் 64 வடிவங்களில் அர்த்தநாரீஸ்வரர் என்பது, வலப்பால் சிவனும் இடப்பால் உமையுமாகக் காட்சி தரும் மாதொருபாகன் வடிவமாகும். பிரம்மா தன் மனைவியாகிய கலைமகளுக்கு நாவில் இடம் கொடுததிருக்கிறார். திருமால் தன் மனைவியாகிய திருமகளுக்கு மார்பில் இடம் கொடுத்திருக்கிறார். ஆனால் உலகத்து நாயகன் இறைவன் சிவபெருமான் தன் உடலின் பாதியை தன் மனைவி கௌரிக்கு கொடுத்து சக்தி இல்லையேன் சிவம் இல்லை, சிவம் இல்லையே சக்தி இல்லை என்று உணர்த்திக் கொண்டிருக்கிறார். ஆண் பெண் வேறுபாடின்றி இருவருக்கும் ஒத்த உரிமையையும் மேன்மையினையும் வழங்கும் வடிவமாக விளங்குவது உமைபங்கன் வடிவம். ஆணோ பெண்ணோ தனியே இருக்கும் பொழுது வாழ்க்கை நிறைவுறுவுது இல்லை. ஒருவருக்கு ஒருவர் சரிசமமாகவும், துணையாகவும் உதவிகள் செய்து அன்புடனும் ஒற்றுமையுடனும் வாழவேண்டும் என்ற அரிய தத்துவத்தை மக்களுக்கு உணர்த்துவதே இவ்வடிவமாகும்.

**அர்த்தநாரீஸ்வரர் வரலாறு:-** அர்த்தநாரீஸ்வரர் - அர்த்தம் + நாரி + ஈஸ்வரர்

அர்த்தம் - பாதி என்று பொருள்; நாரி- பெண் என்று பொருள்.

சிவன் பாதி சக்தி பாதி இணைந்து இருப்பதால் அர்த்தநாரீஸ்வரர் என்று பெயர் பெற்றது. இவற்றிற்கு உமைபங்கன், மங்கையொரு பங்கன், மாதொரு பங்கன் என்று வேறு பெயர்களும் உண்டு.

பிருங்கி முனிவர் சிவனை மட்டுமே வழிபடும் சிறந்த தீவரமான சிவன் பக்தர். இதனால் வருத்தமடைந்த பார்வதி தேவி தவம் இருந்து சிவனின் இடப்பாகத்தை வரமாகப் பெற்றாள். ஆனால் பிருங்கி முனிவர் அர்த்தநாரீஸ்வரர் வடிவம் பெற்றப் பின்னும் இறைவியை வழிபட விருப்பம் இல்லாமல் வண்டு வடிவம் கொண்டு இறைவனைத் துளைத்து இறைவனை மட்டும் வழிபட்டு வந்தார். இதனால் கோபம் கொண்ட பார்வதி தேவி பிருங்கி முனிவருக்கு சாபம் கொடுத்து அவரிடமிருந்து சக்தியை எடுத்துக்கொண்டு நடக்க முடியாமல் செய்தார். சாபம் பெற்றப் பின்பும் பிருங்கி முனிவர் இறைவனை மட்டும் வழிப்பட்டதால், இறைவன் பிருங்கி முனிவரின் பக்தியில் மகிழ்ந்து அவர் நிலையைக் கண்டு வருந்தி மூன்றாவதாக ஒரு காலை வழங்கினார் மேலும் சிவமும் சக்தியும் வேறில்லை, இருவரும் ஒன்றுதான் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் அர்த்தநாரீஸ்வரராக காட்சி தந்து பின்பு சிவலிங்கமாக மாறினார். இலிங்கத்தில் பார்வதியும் கலந்தாள். இதற்குப்பிறகு தினமும்

அதிகாலையில், பிருங்கி முனிவர் அர்த்தநாரீஸ்வரர் மற்றும் லிங்கத்தினை வணங்கி லிங்கத்தின் முன்பாக உள்ள மரகத லிங்கத்திற்கு அபிசேகம் செய்து வழிபட்டு அவர் இழந்த சக்தியை மீண்டும் பெற்றுக் கொண்டார்.

திருவேதிக்குடி திருத்தலத்தில் மட்டும் அர்த்தநாரீஸ்வரர் வித்தியாசமாக பெண்களுக்கு முன்னிலை அமைத்து வலப்பால் அம்மையும் இடப்பால் சிவனுமாகக் காட்சித்தந்து அருள்பாலிக்கிறார்.

**“வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்**
**மிகநல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி**
**சனிபாம்பு இரண்டும் உடனே**
**ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல**
**அடியார் அவர்க்கு மிகவே”.**

- திருஞானசம்பந்தர். கோளறு திருப்பதிகம் (1-8)

**பெண்ணுக்கு திருமணம் -** (திருவேதிக்குடி திருத்தலம்):- அரசகுமாரனுக்கு திருமணம் நிச்சயம் செய்யப்பட்டப் பின் மணப்பெண்ணின் பெற்றோர்கள் இறந்துவிட, அவளின் உறவினர்கள் அவனுக்கு பெண் தர மறுத்து திருமணத்தை நிறுத்தி விட்டார்கள். இதனால் மனமுடைந்த அரசகுமாரன், நின்றுபோன அவனுடைய திருமணம் நடக்க இத்தல இறைவனை பூசித்து வேண்டினான். இறைவன் அவன் பக்தியில் மகிழ்ந்து, அவன் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவும் அப்பெண்ணின் வாழ்க்கை நலமாக இருக்கவும், ஒரு பூதத்தை அனுப்பி அவனுடன் நிச்சயம் செய்யப்பட்ட பெண்ணைக் கொண்டுவரச் செய்து அரசகுமாரனுக்கும் அப்பெண்ணுக்கும் திருமணம் செய்து வைத்தார் என்று இத்தல வரலாறு கூறுகிறது. நீண்ட நாட்கள் திருமணம் ஆகாமல் தடை ஏற்பட்டவர்கள் இத்தலத்தின் இறைவனை வழிபட்டால் விரைவில் திருமணம் நடைபெறும் என்பது ஐதீகம்.

**நாயன்மார்களில் பெண்கள்:-**

**காரைக்கால் அம்மையாரை, அம்மையே என அழைத்தல்:-** காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர் புனிதவதி. சிறுவயது முதலே சிவபெருமானை வழிபட்டும் சிவன் அடியார்களை உபசரித்து வந்தாள். திருமண வயது வந்தவுடன் பிரம்மதத்தன் உடன் நிச்சயமாகி திருமணம் நடைபெற்றது. ஒரு நாள் தன் கணவர் இரண்டு மாங்கனிகளை இல்லத்திற்கு அனுப்பி வைத்தார். அந்நேரத்தில் சிவனடியார் ஒருவர் உணவு உண்ண இல்லத்திற்கு வந்திருந்தார். புனிதவதி அடியார்க்கு அன்னம் கொடுத்தப்பின் ஒரு மாங்கனியை சிவனடியார் உண்பதற்கு கொடுத்துவிட்டாள். அவரும் மன மகிழ்ந்து மாங்கனியை உண்டு, புனிதவதிக்கு ஆசிக் கூறிச் சென்று விட்டார்.

மதிய உணவிற்காக இல்லத்திற்கு வந்த பிரம்மதத்தன் உண்டப்பின் மாங்கனியை சுவைத்தான். மற்றொன்றை புனிதவதியிடம் கேட்க, தன் கணவன் என்ன சொல்லுவரோ என்ற குழப்பத்தில் உள்ளே சென்று இறைவன் சிவபெருமானிடம்

வேண்டினாள். இறைவன் அருளால் கிடைத்த மாங்கனியை தன் கணவருக்குக் கொடுத்தாள். முதலில் உண்ட மாங்கனியை விட இம்மாங்கனி மிகவும் சுவையாக இருந்ததென்றும் இதுபோல் இதுவரை நான் சுவைக்க வில்லை என்று கணவர் கூறினார். உடனே புனிதவதி நடந்த அனைத்தையும் தன் கணவரிடம் கூறினாள். ஆனால் கணவன் அவளை நம்பாமல் சோதிக்க நினைத்து இன்னொன்றை கேட்கச் சொன்னான். மீண்டும் இறைவனிடம் புனிதவதி வேண்டி மறுபடியும் ஒரு மாங்கனி கைக்கு வந்தது. இதைக்கண்ட பிரம்மதத்தன் “புனிதவதி ஒரு தெய்வம்” இவளுடன் குடும்பம் நடத்த முடியாது என்று கூறி இரண்டாவது திருமணம் செய்துக்கொண்டான். புனிதவதி தனித்துவிடப் பட்டாள்.

இதனால் மனமுடைந்த புனிதவதி வாழ்வை வெறுத்த நிலையில், தன் அழகு நீங்கி எலும்புக்கூடு போன்ற பேய் வடிவம் வேண்டும் என்று இறைவனை வேண்டி, அதன்படி உருவம் பெற்றுக் கொண்டு பல தலங்களுக்குச் சென்று சிவதரிசனம் செய்து வந்தாள். கயிலாயம் செல்ல உத்தேசித்து புறப்பட்டாள். கயிலாயம் இடம் புனிதம் என்பதால் காலால் செல்லாமல் தலையால் நடந்து கயிலாயத்தை அடைந்தாள். சிவன் புன்னகையுடன் வாருங்கள் அம்மையே என்றழைத்தார். இறைவன், அம்மையாருக்கு அவர் வேண்டிய வரத்தை அருளினார். இறைவன், புனிதவதி தாயார்க்கு திருவாலங்காட்டில் தன்னுடைய திருத்தாண்டவக் காட்சித் தந்து அத்திருவாலங்காட்டிலேயே தன் திருவடிக்கீழ் என்றும் இருக்க அருளினார். ஈசனே அம்மையே என்றழைத்ததால் புனிதவதி தாயார், காரைக்கால் அம்மையார் என்றழைக்கப்பட்டார். அந்தாதி என்கின்ற இலக்கண முறையை அறிமுகம் செய்தவர் இவர். 63 நாயன்மார்களில் ஒருவர் ஆவார். இவரின் குருபூசை நாள் பங்குனி சுவாதி ஆகும்.

**“பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்**
**சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்**
**மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் மெருமானே**
**எஞ்ஞான்று தீர்ப்பது இடர்”.**

-காரைக்கால் அம்மையார், அற்புத திருவந்தாதி (1)

**இசைஞானியார் நாயனார்:-** திருவாரூரில் வாழ்ந்த ஆதி சைவ ஞான சிவாச்சாரியாருக்கு மகளாப் பிறந்தவர். இவர் கௌதம கோத்திரத்தினை சேர்ந்தவர். திருவாரூரில் உள்ள சிவபெருமானின் மீது அளவுக் கடந்த பத்தி கொண்டவராக இருந்தார். சிவபக்தரான சடையநாயனார் என்பவருடன் இவருக்குத் திருமணம் நடைபெற்றது. இத்தம்பதியினருக்கு மகனாக சுந்தரமூர்த்தி நாயனார் பிறந்தார். சைவநெறியில் நின்றமைக்காகவும், சுந்தர மூர்த்தி நாயனாரைப் பெற்றமைக்காகவும் இவர்கள் இருவரும் நாயன்மார்கள் பட்டியலில் சேக்கிழார் இணைத்துள்ளார். இசைஞானியர் குருபூசை நாள் சித்திரை சதயம்.

**மங்கையர்க்கரசி நாயனார்:-** எந்தவொரு ஆணின் வாழ்க்கையையும் சிறப்பாக அமைய இருவர் உள்ளனர். ஒன்று அவன் தாய் மற்றொன்று அவன் மனைவி. மனைவி என்பவள் கணவன் பாதை தவறிச் செல்லும் போது நல்ல செயல்களை

ஊக்குவிப்பவளாகவும் திருத்தும் அக்கறையுள்ளவளாகவும் தோழியாகவும் இருக்க வேண்டும். நல்ல கணவன் என்பவன் மனைவி சொல்லும் நல்ல கருத்துக்களைக் கேட்டு நல்மார்க்கத்தையே தெரிவு செய்து கொள்ள வேண்டும் என்பதை எடுத்துரைத்தவர் மங்கையர்க்கரசி நாயனார். இறைவனின் மீது பக்தி கொண்டு தன் கணவனின் கண்களைத் திறந்தவர்.

மணிமுடிச்சோழனின் மகள் மங்கையர்கரசி. இவளின் இயற்பெயர் மானி. கூன் பாண்டிய மன்னனுக்கு மனைவியானார். ஆனால் மன்னனோ சமண மதத்தைத் தழுவி வந்தார். இதனால் பாண்டிய நாட்டு மக்களும் மன்னன் எவ்வழியோ அவ்வழியே என்று சமண மதத்தை தழுவி வந்தனர். இதனால் நாட்டில் அமைதி இல்லாமல் துன்பத்துடன் தீமை நடந்துக்கொண்டிருந்தது.

திருஞானச்சம்பந்தரைப் பற்றி அறிந்த மங்கையர்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் பாண்டிய நாட்டில் ஏற்பட்டுள்ள இன்னல்களை மாற்றுவதற்காகவும் தன் கணவரை சமண மதத்தில் இருந்து மாற்றி சைவ மதத்தில் ஈடுபடுத்தவும் திருஞானச்சம்பந்தரை பாண்டிய நாட்டிற்கு வரவேண்டினர். மதுரைக்கு வந்த திருஞானச்சம்பந்தர், கூன் பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்த்து அவனை நின்ற சிர் நெடுமாறனாக மாற்றினார். அன்று முதல் நின்றசீர் நெடுமாறன் சைவ மதத்திற்கு மாறி பல இறைத் தொண்டுகளை தன் மனைவி மங்கையர்க்கரசியுடன் தம்பதிகளாகச் சேர்ந்து செய்து வந்தனர். 63 நாயன்மார்களில் ஒருவர் ஆவார். இவர் குருபூசை நாள் சித்திரை ரோகினி.

**பக்தியின் மூலம் மண்டோதரி பெற்ற வரம்:-** இராவணின் மனைவி மண்டோதரி. இவள் எப்பொழுது ஐந்தெழுத்தை உச்சரிக்கும் மகா சிவ பக்தி கொண்டவள். தான் விரும்பும் நேரத்தில் இறைவன் காட்சியளிக்க வேண்டும் என்ற வரத்தினைப் பெற்றிருந்தாள். ஒரு நாள் பள்ளியறையில் அமர்ந்திருந்த நேரத்தில் இறைவனை தியானித்து தனக்குக் காட்சியளிக்க வேண்டும் என்று வேண்டினாள். இறைவன் காட்சிக் கொடுத்த சமயத்தில் இராவணன் உள்ளே நுழைந்தான். இச்சூழ்நிலையைச் சரி செய்வதற்காக, இறைவன் குழந்தையாக மாறி அழுதுக் கொண்டிருந்தான். இதைக் கண்டு இராவணன் மண்டோதரியிடம் கேட்டப்பொழுது இக்குழந்தை சேடியுடையது என்று கூறிவிட்டாள். இராவணன் அங்கிருந்து சென்றவுடன் மீண்டும் அவள் முன் தோன்றி காட்சியளித்து மறைந்தார். இந்நிகழ்ச்சி குழைத்தபத்து மற்றும் உத்திரகோசமங்கை தல புராணத்திலும் உள்ளது. இராவணன் மற்றும் மண்டோதரி திருமணம் நடந்த தலம் உத்திரகோசமங்கை. மாணிக்கவாசகர் இக்கதையை குயில்பத்தில் கூறியிருக்கிறார்.

**“ஏர்தரும் எழுல கேத்த எவ்வுரு வுந்தன னுருவாய்**
**ஆர்கலி சூழிதென் னிலங்கை அழகமர் வண்டோதரிக்குப்**
**பேரரு ளின்ப மளித்த பெருந்துறை மேய பிரானைச்**
***சீரிய வாயாற் குறிலே தென்பாண்டி நாடனைக் கூவாய்”***

- (குயில்பத்து (4-8))

பெண்களின் பத்தியில் மனமகிழ்ந்து வேண்டும் வரத்தை அளிப்பவர் இறைவன்.

**தாயாக அருள்பாலிக்கிறார் தாயுமானவர் சுவாமி (மலைக்கோட்டை):-**

இந்து புராணத்தின்படி இரத்னாவதி தனது கணவன் தனகுப்தனுடன் திரிசிர மலையில் இல்லறம் நடத்திவந்தாள். தினந்தோறும் இம்மலையில் உள்ள செவ்வந்திநாதரை வழிபட்டுத் தாயாகும் பேறு அடைந்தாள். இவள் தீவர சிவ பக்தை. அவளின் பிரசவத்திற்குத் துணைக்கு தனது தாயை அழைத்திருந்தாள். பூம்புகாரிலிருந்து புறப்பட்டு திரிசிர மலைக்கு வரும் வழியில் காவிரி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால், அவளின் தாய் வரமுடியாத சூழ்நிலையில் வடகரையிலியே நின்றுவிட்டாள். பிரசவிக்கும் நேரம் நெருங்கி விட்ட நிலையில் தன் தாய் வரவில்லை என்ற மனவருத்தத்தில் செவ்வந்திநாதரிடம் வேண்டினாள். இறைவனே அவளின் பக்தியில் மனமகிழ்ந்து தாய் போல் உருவம் எடுத்து, இரத்னாவதிக்கு சுகப்பிரசவம் பார்த்தார். அவளின் தாய் வரும் வரை அவள் இல்லத்திலேயே தங்கி குழந்தையையும் அவளையும் கவனமாகவும் நன்றாகவும் பார்த்துக்கொண்டார். ஆற்றின் வெள்ளப்பெருக்கு குறைந்ததும் அவளின் தாய் இரத்னாவதி இல்லத்திற்கு வந்து நடந்ததைக் கூறினாள். இதைக்கேட்ட இரத்னாவதி இங்குள்ளவர் யார் என்ற வினா எழுப்பிய பொழுது இறைவனே தனக்குத் தாயாக வந்து சேவை செய்தார் என்பதை அறிந்துக்கொண்டாள். அன்று முதல் செவ்வந்திநாதருக்கு தாயுமானவர் என்ற பெயர் வந்தது. கர்ப்பிணிப் பெண்கள் தாயுமானவர் சுவாமியை வணங்கிவந்தால் சுகப்பிரசவம் நடக்கும் என்பது நம்பிக்கை. இம்மலையில் உள்ள சிவலிங்கம் தானாக வந்தது என்பது ஐதீகம்.

**திரிசிர மலை பெயர் விளக்கம்**:- திரிசிரன் என்ற அசுரன் இத்திருத்தலத்தில் உள்ள சிவலிங்கத்தைப் பூசித்து வந்தான். இத்திருக்கோயிலின் கருவறை திருப்பணி திரிசிரன் செய்ததாகும்.

**செவ்வந்திநாதர் பெயர்க்காரணம்**:- சாரமா முனிவர் நந்தவனத்தில் உள்ள செவ்வந்திமலரைக் கொண்டு பூசை செய்து வந்தார். இதனால் இறைவன் பெயர் செவ்வந்திநாதர் என்று அழைக்கப்பட்டது. சோழமன்னன் ஆட்சி செய்து வந்தான். இங்குள்ள பூக்களைப் படை வீரர்கள் திருடி அரசனுக்குக் கொடுத்தனர். அரசன் தன் மனைவியருக்குக் கொடுத்தார். ஆனால் மூத்தவள் மட்டும் அரண்மனையில் உள்ள சிவபெருமானுக்கு அணிவித்து பூசை செய்து வந்தாள். இவ்வாசத்தில் மகிழ்ந்த அரசன் தினமும் இப்பூக்களைக் கொண்டு வரச்சொன்னான். படைவீரர்கள் தினமும் திருடிக் கொடுத்தனர். சாரமா முனிவர் பூசை தடைப்பட்டது. இதனால் அவர் அரசரிடம் முறையிட்டார். ஆனால் அரசர் கண்டுக்கொள்ளவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் இறைவனிடம் முறையிட்டார். உண்மையான அன்பு உள்ள அடியார் மனம்வருந்தினால் இறைவன் பொறுத்துக்கொள்ளமாட்டார். உக்கிரப்பார்வை செலுத்தி மண் மழைப் பொழிந்தார். அரசன் அழிவுற்றான். மூத்தவள் அங்கிருந்து தப்பி மேலைத் திருக்காட்டுப் பள்ளிக்குவர இறைவன் கானல் வெப்பம் தணிவித்து அருளினார்.

**அவள் இவள் எனச்சுட்டிக்காட்டிய சாட்சிநாதர் (அவளிவணல்லூர்) :-** நல்லூர் என்ற ஊரில் சிவாச்சாரியரின் இரண்டு மகள்களில் மூத்த மகளாகிய சுசிலைக்குத் திருமணம் நடைப்பெற்றது. மூத்தவளின் கணவன் காசி யாத்திரைச் சென்றுவிட்டான்.

திரும்பிவரும் காலத்திற்குள் அவளுக்கு அம்மைவார்க்கப்பெற்று உடல்நலம் கெட்டு கண் பார்வை இழந்து, உருவில் நிறம்மாறி விட்டது. காசி யாத்திரை சென்று திரும்பி வந்தவன் மூத்தவள் நிலையைக் கண்டு என் மனைவி இவள் இல்லை இளையவள்தான் என் மனைவி என்று வாதிட்டான். இதனால் மனமுடைந்த சிவாச்சாரியர் இறைவனிடம் முறையிட்டு அழுது புலம்பினார்.

இந்நிலையைக் கண்டு சாட்சியாக, இறைவனே இறைவியுடன் ரிஷப வாகனத்தில் எழுந்தருளி அவள் இவள் (மூத்தவள் உன் மனைவி என்று என சுட்டிக்காட்டினார் மூத்தவள் இத்திருத்தலத்தில் உள்ள தீர்த்தத்தில் மூழ்கி இழந்த கண் பார்வையும் இழந்த உடல் வனப்பும் பெற்றாள். இத்திருத்தலத்தில் உள்ள கர்ப்பகிரகத்தில் இச்செய்தியை உணர்த்தும் பிரதிமைகள் உள்ளன.

அவள் இவள் என இறைவனே சுட்டிக்காட்டியதால் இவ்வூர் பெயர் அவளிவணல்லூர் (அவள்+இவள்+நல்லூர்) என்று பெயர் பெற்றது. இங்குள்ள இறைவன் சுயம்பு வடிவமானவர்.

**தென்னங்குலையை வளையச் செய்த இறைவன் - (வடகுரங்காடுதுறை திருத்தலம்) :-**

சிவன் மீது அளவுக்கடந்த அன்புக் கொண்ட செட்டிப் பெண்ணொருத்தி தன் கணவருடன் வட குரங்காடுதுறை திருத்தலத்திற்கு இறைவனைக் காண வந்தாள். அவள் மிகவும் தாகத்தால் வருந்தினாள். இதைக் கண்ட கணவன் நீர் எடுத்துவரச் சென்றான். நேரம் ஆகியும் கணவன் வரவில்லை. இதனால் தாகம் அவளை வருத்தியதால் மிகவும் சோர்வடைந்த நிலையில் இறைவனை வேண்டினாள். தாகத்தால் வருந்திய அவளுக்கு இறைவன் சிவபெருமான் ஒரு தென்னங்குலையை வளையச் செய்து, இறைவனே பணியாளன் போல் சென்று அவளுக்கு இளநீர் ஒன்றைப் பறித்துச் சீவிக் கொடுத்து அவள் தாகத்தைத் தணித்துவிட்டார். தண்ணீருடன் வந்த கணவனிடம் நடந்ததை சொல்ல கணவன் அவளை இங்கேயே இருக்கச் செய்து விட்டு அவளுடன் வாழ்வதற்கு அஞ்சி சென்று விட்டான்.

அவள் அங்கேயே வழிபட்டுக் கொண்டேயிருந்து பின்பு முக்திபெற்றாள். இப்பெண்ணின் வடிவம் முதற்பிராகாரத்தில் திருவாயிலுக்கு அருகே வடக்கில் மேற்கு நோக்கி அஞ்சலி செய்த வண்ணமாக உள்ளது. இவ்விறைவனின் பெயர் குலைவணங்கீசர்.

**தினம் ஒரு பொன் காசு - பொன்வைத்த நாதேசுவரர் (திருச்சேற்றமம்) :** சங்கரன் செட்டியார் தன் மனைவி கருவுற்ற சமயத்தில் பொருள் ஈட்டுவதற்காக வெளியூர் சென்றுவிட்டார். சிவப்பற்று கொண்டு சிவத்தொண்டு செய்து வாழ்ந்து வந்தாள் அவன் மனைவி. அவள் வாழ்வதற்கு உதவும் வகையில் தினம் ஒரு பொன் காசு கோயில் சந்நிதியில் வைத்துக் காப்பாற்றி வந்தார் இறைவன். இதலால் இவருக்குப் பெயர் பொன்வைத்தநாதர் என்று பெயர். ஊர் திரும்பிய செட்டியாரிடம் ஊர் மக்கள் அவளின் ஒழுக்கத்தைத் தவறாகக் கூறினார். இதனால் மனமுடைந்த அவன் மனைவி இறைவனிடம் வேண்டினாள். அப்பதிவிரதையின் பிரார்த்தனையின்படி சந்நிதிக்குப் பின்னிருந்த ஆத்தி விருட்சம் கோயிலுக்கு முன்னும் பலிபீடத்திற்கு முன்னிருந்த நந்தி அதற்குப் பின்னுமாய் இடம் மாறியிருக்கும் படி சிவபெருமான் செய்தருளினார்.

**திருமுடியை வளைத்த திருப்பனந்தான் திருத்தலம் :-** சிவநேசம் கொண்ட தாடகையென்னும் மங்கையொருத்தி இத்தலத்தில் சிவபெருமானை நாள்தோறும் பூசித்து வருவாள். ஒரு தினம் இறைவனுக்கு சாத்துவதற்காகப் பூமாலையை இரண்டு கையாலும் எடுத்த பொழுது, அவளாடை நழுவத்தொடங்கியது. முழங்கையால் அவள் ஆடையை இடுக்கிக்கொண்டு மாலை சாத்துவதற்கு முடியாமல் மிகவும் சிரமப்பட்டாள். அப்பெண்ணின் பத்தியில் பெருமிதம் கொண்டு அவள் சிரமத்தினைப் போக்கும் விதமாக இறைவன் சிவபெருமானே தன் திருமுடியை வளைத்து அம்மாலையை ஏற்றுக் கொண்டார் என்பது இத்திருத்தலத்தின் தலப்புராணமாகும். இறைவன், ஒரு தாடகை பெண்ணிற்கு வளைந்தும், குங்கிலியக் கலய நாயனார்க்கு நிமிர்ந்தும் அடியவர்களுக்கு எளியவராய் இரங்கிய தலமாகும்.

**திருப்புறம்பியம் சாட்சிநாதர்:-** அரதனகுப்தன் என்னும் வணிகள் இத்திருக்கோயிலின் வன்னி மரத்தின் கீழ் பாம்பு தீண்டி இறந்துவிட்டான். வணிகனுடன் வந்த அவனுடைய மாமன் மகள் (ஆதாரவற்ற நிலையில்) இளம் கன்னி இரத்தினாவளி இவ்வாலயத்தின் ஈசனிடம் அழுது புலம்பி மன்றாடினாள். இறைவன் காட்சி அளித்து தனகுப்தனை உயிர்ப்பித்து மடைப்பள்ளி, வன்னிமரம், கிணறு ஆகியவற்றை சாட்சியாக வைத்து திருமணம் நடத்தி வைத்தார். மதுரைக்குச் சென்ற வணிகன் தனகுப்தனின் முதல் மனைவி இவளை ஏற்காத நிலையில், இரத்தினாவளி திருமணம் செல்லாது என்று ஊர் மக்களிடம் கூறி அவளை வெளியே அனுப்ப முயற்சி செய்தாள். இந்நிலையில் இரத்தினவளியைக் காக்கும் நோக்குடன், இறைவன் சாட்சிகளுடன் (மடைப்பள்ளி, வன்னிமரம், கிணறு) தோன்றி உண்மையை எடுத்துரைத்தார். மதுரை சுந்தரேசர் திருக்கோயிலில் சாட்சியாக வந்த மடைப்பள்ளி, வன்னிமரம், கிணறு ஆகியன இன்றும் உள்ளன. இப்புராணக்கதை திருவிளையாடல் புரணாத்திலும் சிலப்பதிகாரத்திலும் கூறப்பட்டிருக்கின்றன. இங்கு இறைவன் புன்னைநாதர், சாட்சிநாதர் என்று அழைக்கப்படுகிறார்.

நீதி சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளிலும் வெற்றி அடைய இத்திருக்கோயிலின் இறைவனை வழிப்பட்டால் வெற்றி உண்டாகும் என்பது இத்தலத்தின் சிறப்பாகும். ஒரு முறை பிரளயம் ஏற்பட்ட காலத்தில் பெருவெள்ளம் இந்த ஊரை அணுகாமல் வெளியே நின்றுவிட்டது. பிரளயத்துக்கு புறம்பாய் இருந்ததால் இத்தலம் திருப்புறம்பியம் என்று பெயர் பெற்றது.

இறைவன் தன்மீது அன்புக் கொள்பவர் ஆணா பெண்ணா என்ற வேறுபாடு பார்ப்பதில்லை. துறவத்தை மேற்கொண்டு அகோரி நிலையில் இருக்கும் இறைவன் பக்தர்களின் அன்பை மட்டுமே ஏற்றுக்கொண்டு அவர்களின் தேவைக்கு ஏற்ப அருள்பாலிக்கிறார். ஆபரணங்களின் மீதும் ஆடம்பரத்தின் மீதும் ஆசைக் கொள்ளதவர் இறைவன். சிவபெருமான் தன்னிடம் வரும் பக்தர்களிடம் எந்தவிதமான பிரதிபலன்களையும் எதிர்பார்க்காமல் ஒரு தாய்க்கு மேலாக அன்பை செலுத்தி அருள்பாலிக்கிறார்.

**துணைநூற்பட்டியல்:-**

1. முனைவர்.கலை.இராம.வெங்கடேசன், தலபுராணங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள், இந்து சமய மன்றம், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் சமய மற்றும் சமுதாய சேவை நிறுவனம், நெ.1, சாலை தெரு, காஞ்சிபுரம். முதற்பதிப்பு - 2020

2. வித்துவான் சு.பாலசாரநாதன், திருத்தலங்கள் வரலாறு, டாக்டர்.உ.வே.சா. நூல்நிலையம், பெசன்ட் நகர், சென்னை.

3. கமலா கந்தசாமி, அறுபத்துமூன்று நாயன்மார்கள், அருணா பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு - 2020

4. ப.முத்துக்குமாரசுவாமி, தென்னாட்டுச் சிவத்தலங்கள், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை. முதற்பதிப்பு - 2020

5. முனைவர். இரா. செல்வக்கணபதி, சைவ சமயக் கலைக்களஞ்சியம், தொகுதி-1, இந்துசமய அறநிலையத்துறை, சென்னை. முதற்பதிப்பு - 2020